செய்தி வெளியீடு எண்: 742 நாள்: 01.11.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (1.11.2019) தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் அடுக்கு காகித அட்டை ஆலையின் விரிவாக்க திட்டத்தின் முதல்கட்டமாக 1100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2019–ல் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் அடுக்கு காகித அட்டை ஆலையின் விரிவாக்க திட்டத்தின் முதல்கட்டமாக, 1100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் திறன் கொண்ட வன்மரக்கூழ் தயாரிக்கும் பிரிவு, இரசாயன மீட்பு கொதிகலன் பிரிவு மற்றும் 20 மெகா வாட் திறன் கொண்ட மின்னாக்கி நிறுவுதல் ஆகிய பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள். இந்த ஆலை விரிவாக்க திட்டம் மொத்தம் 2,520 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் 2018–19ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு ஈவுத் தொகையான 18 கோடியே 33 லட்சத்து 36 ஆயிரத்து 750 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத் அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் `மை ஸ்டாம்ப்' (My Stamp) என்ற தபால் தலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வெளியிட்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ். வளர்மதி, அரசு தலைமைக் கொறடா திரு.எஸ். இராஜேந்திரன், தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சு. சிவசண்முகராஜா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 1.11.2019**